# மா பெரும் வாழ்க்கை

## இயேசுவின் வாழ்க்கை மரணம் உயிர்த்தெழுதல்

சிறுவர்களுக்கு போதிப்போர் பாடம் J1b யை வாசிக்கவும்

**ஜெபம் :** "பரலோகத் தந்தையே! நானும் உமது மந்தையும், இயேசு இந்த மண்ணில் வாழ்ந்த அற்புதமான வாழ்க்கையைக் கற்றுக் கொள்ள உதவும். அதனால் நாங்கள் சேர்ந்து அவர் எங்களுக்காக செய்த எல்லாவற்றிற்குமாக உமக்கு நன்றி செலுத்தக் கூடும்."

1. **மாபெரும் வாழ்க்கையைப் பற்றி போதிக்க உங்கள் மனதையும் இருதயத்தையும் ஆயத்தம் செய்யுங்கள்**

மற்றவர்களுக்கு சொல்லத் தக்கதாக இயேசுவைப் பற்றிய நற்செய்தியை உங்கள் மந்தைக்கு **போதிக்கவும்.**

யூதர்கள் மேசியா அல்லது கிறிஸ்து என்று அழைத்தவரின் வருகையைப் பற்றி, இயேசு இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்னரே **பழைய ஏற்பாட்டு** தீர்க்கத்தரிசிகள் ஏறத்தாழ 300 தீர்க்கத்தரிசனங்களைக் கூறினர்.

உலகத்தில் வரும் மேசியா (கிறிஸ்து) குறித்து கீழ்வரும் ஏழு தீர்க்கத்தரிசிகள் **என்ன கூறினர்** என்பதைக் காண்போம்.

a) ஆபிரகாம் (ஆதி. 22:18)

b) மோசே (உபா. 18:18-19)

c) ஏசாயா (ஏசா. 53:7-8)

d) தாவீது (சங். 2:7)

e) தாவீது (சங். 16:8-11)

f) நாத்தான் (2 சாமு. 7:16)

g) யோவான் ஸ்நானகன் (லூக். 3:15-17)

மேசியா உலகத்தில் வந்த போது, அவர் செய்ததை எல்லாம் நேரில் கண்டு கேட்ட சாட்சிகள் நிறைய இருந்தன. அவர்களில் சிலர் இவற்றை புதிய ஏற்பாடு என்ற புத்தகத்தில் எழுதினர். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள், இயேசுவைப் பற்றி அவர்கள் மிக முக்கியம் என்று கருதிய விஷயங்களை கூறினர்.

a) இயேசு இந்த உலகத்தில் இருந்தபோது தாம் மக்களுக்கு செய்தவைகளைக் கொண்டு தாம் யார் என்பதைக் காட்டினார். கீழ்வரும் வேதபகுதியில் இயேசு என்ன செய்தார் என்பதைக் காண்க:

- குருடர்கள் (மத். 9:27-31)
- அசுத்த ஆவி பிடித்த மனிதன் (மத். 9:32-33)
- இறந்துபோன குழந்தை (லூக். 8:49-55)

b) தேவனுடைய பரிசுத்தத்தையும், விசுவாசம் எவ்வாறு கொள்வது என்பதையும், எவ்வாறு ஒரு பரிசுத்தமான மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவது என்பதையும் இயேசு மக்களுக்கு போதித்தார். அவர் சிறு சிறு விஷயங்களைப் பற்றிய, கதைகள் மூலம் மக்களுக்குப் போதித்தார் (விதை விதைக்கப் புறப்பட்ட மனிதனைப் போல). இந்த வேத பகுதியில் காண்க:

- தேவன் ஆசீர்வதிக்கும் இருவகையான மக்கள் (மத். 5:1-16)
- இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு நடத்த வேண்டும் (யோவான் 14:1-17)
- உலகத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் (மத். 21-31)



c) இயேசுவின் விரோதிகள் அவரை ஒரு மரச் சிலுவையில் ஆணிகளால் அறைந்தபோது அவர் இறந்தார். இந்த வேத பகுதிகளில் காண்க:

- இயேசுவைக் கொல்ல விரும்பியது யார்? (லூக். 23:12-21)
- இயேசு எவ்வாறு கொல்லப்பட்டார் (லூக். 23:32-34)
- இயேசு எவ்வாறு இறந்தார் (லுக். 23:44-53)

d) மூன்று நாள் கழித்து, தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார்

- இறப்பதற்கு முன் இயேசு கூறியது (மாற்கு 9:31-32)
- வானத்தில் இருந்து தூதன் உரைத்தது (மத். 28:1-10)
- உயிர்த்தெழுந்த பின் இயேசு விளக்கியது (வெளி. 1:17-18)

e) இயேசு தாமறிந்த பலருக்கு காட்சி அளித்து தமக்குத் தாமே சாட்சியானார். காண்க:

- தாம் உயிரோடு இருப்பதை இயேசு எவ்வாறு நிரூபித்தார் (லூக். 24:36-43)
- இயேசு எதைப்பற்றி பேசினார் (அப். 1:1-13)
- யாருக்கு அவர் தென்பட்டார் (1 கொரி 15:3-8)

f) தம்மிடத்தில் திரும்புகிற யாவரையும் மன்னிப்பதாக இயேசு வாக்குத்தத்தம்செய்தார். இந்த வேத பகுதியில் உயிர்த்தெழுந்த கிறிஸ்து என்ன கூறினார் என்பதைக் காண்க:

- மன்னிப்பைப் பற்றி (லூக். 24:44-48)
- தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பற்றி (அப். 1:4-8)
- இயேசுவின் சீஷர்கள் ஆவது பற்றி (மத். 28:16-20)

g) இயேசு திரும்பி வரும் நாள் வரை தேவன் அவரைப் பரத்துக்கு எடுத்துக் கொண்டார். இந்த வேத பகுதிகளில் காண்க :

- இயேசுவின் சீஷர்களிடம் தூதர்கள் கூறியது என்ன (அப். 1:9-11)
- தேவன் தமது விரோதிகளிடம் கூறியது என்ன (மாற்கு 14:60-62)
- பிறருக்கு சேவை செய்பவர்களைப் பார்த்து இயேசு என்ன கூறுவார் (மத். 25:31-34)

**2. வரும் வாரத்தின் நடவடிக்கைகள் குறித்து உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக**

- உங்கள் கலாச்சாரம் ஓவியத்தை அனுமதிக்குமானால், இயேசுவைப் பற்றிய ஏழு உண்மை விஷயங்களை ஓர் ஓவியரைக் கொண்டு வரையவும். இயேசுவைப் பற்றிய முக்கிய விஷயங்களை மனப்பாடமாகக் கூற பயிற்சி எடுக்கவும். பின் வீடுகளுக்கு சென்று மக்களுக்குக் கூறுங்கள்.கதையைச் சொல்லும் போது படங்களையும் காட்டவும்.
- ஒரு கருத்தரங்கை நடத்தத் திட்டமிடுங்கள். அதில், உங்கள் கலாச்சாரத்திற்கு உகந்த வகையில், சித்திரங்கள், பாடல்கள், கவிதைகள் பயன்படுத்தி இயேசுவின் கதையை எப்படிக் கூறுவது என்று விசுவாசிகளுக்கு போதிக்கவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

தற்போதைய தேவைகளுக்கும், அந்தந்தப் பகுதி பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும்.

பகுதி 1 ல் நீங்கள் படித்த, ஒன்று அல்லது இரண்டு இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாடகமாக்குக.

பகுதி 1 ல் நீங்கள் கற்ற இயேசுவைப் பற்றிய ஏழு முக்கிய விஷயங்களைக் கூறி அவற்றைப் பற்றி கேள்விகள் கேட்கலாம். தாங்கள் அறிந்தவற்றை மக்கள் கூறட்டும். அவர்களால் ஞாபகப்படுத்த முடியாதவற்றை மட்டுமே கூறவும்.

- இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தது என்ன?
- இயேசு மக்களுக்கு என்ன செய்தார்?
- நாம் எவ்வாறு வாழவேண்டும், இந்த உலகத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பவற்றைப் பற்றி இயேசு என்ன போதித்தார்?
- இயேசு எவ்வாறு மரித்து உயிர்த்தெழுந்தார்?
- மரித்தோரில் இருந்து எழுந்த பிறகு இயேசு யாருக்குக் காணப்பட்டார்?
- மனம் திரும்பி தன்னைப் பின்பற்றும் விசுவாசிகளுக்கு உயிர்த்த கிறிஸ்து செய்த வாக்குத்தத்தம் என்ன?
- இறுதியாக இந்த உலகத்தை விட்டு இயேசு எவ்விதம் எழுந்தருளிப் போனார்?

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகள் ஆகியவற்றை வழங்கட்டும்.

**கர்த்தரின் பந்தி**யை ஆசரிக்கும் முகமாக எபிரேயர் 7:7-12 ஐ வாசிக்கவும். பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் மிருகபலியை எடுத்துக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்தார்கள். ஆனால் இயேசுவோ தமது இரத்தத்தின் மூலம் தமது பிதாவின் சமூகத்தில் சென்றார் என்பதை விளக்கவும். நீங்கள் பகுதி I ல் படித்த சில வசனங்களை வாசித்து அவரது சிலுவை மரணத்தையும், அவரது இரண்டாம் வருகையைப் பற்றியும் கூறலாம்.

**எபிரேயர் 1:1-2** ஐ இணைந்து மனனம் செய்க.

மக்கள் சிறுசிறு குழுவாகக் கூடி, ஒருவருக்காக ஒருவர் **ஜெபிக்கவும்.** இயேசுவின் கதையை தங்கள் குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், அருகிலும் தூரத்திலும் உள்ள மக்கள் இனங்களுக்கும் எடுத்துச் செல்ல உதவுமாறு தேவனை வேண்டவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net